உரிமை வழங்கல் சட்டம் 1976-க்கும் கொண்டு வர, அரசு உத்தேசித்துள்ளது. திரு. வீரையன் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் இப்போது பதில் இல்லை. தனிக் கேள்வி போட, கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே, களம் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு, குளம் புறம்போக்கு, தோப்புப் புறம்போக்கு போன்ற இடங்களில் பல ஏழை விவசாயிகள் குடியிருந்து வருகிறார்கள். அந்தக் கிராமத்திலே உள்ளவர்கள் ஆட்சேபணை இல்லை என்று முறையீடு செய்வார்களேயானால், அந்த இடங்களை ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்குவதற்கும், அப்படிப்பட்ட இடங்களைக் குடியிருப்பு நத்தம் புறம்போக்காக மாற்றுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, புதிதாக வரவிருக்கிற சட்டத்தில் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**போகுவரத்துத்துறை ஊழியர்களுக்குச் சமுகப் பாதுகாப்புத் திட்டம்.**

6414.—. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) (1) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பணியிலிருக்கும் பொழுது இறக்க நேரிடும் தொழிலாளரின் குடும்பத்தாரும், ஓய்வுபெறும் தொழிலாளர்களும் பயன் பெறுவார்கள்.

(2) அனைத்துத் தொழிலாளர்களிடமிருந்தும், அந்தந்த மாதத்தில் இறக்கும் அல்லது ஓய்வு பெறும் ஒவ்வொரு தொழிலாளருகாகவும், அவர்களது அந்த மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படுகிறது.

(3) சமூக பாதுகாப்புத் திட்ட உதவித் தொகையை சம்பந்தப்பட்ட இறந்த தொழிலாளர்களின் சட்ட பூர்வ வாரிசுதாரர்களுக்கும் அல்லது ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அலுவலரால் தொழிற்சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் வழங்கப்படுகிறது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத் தொழிலாளிகளுக்குச் சமூக நலத் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தச் சமூக நலத் திட்டங்கள் என்னென்ன என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், பணியில் இருக்கும்போது ஒரு தொழிலாளி இறந்து விட்டால், உதாரணமாக, பல்லவன் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், பணியில் இருக்கும் போது, ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், ஒவ்வொரு தொழிலாளியினுடைய சம்பளத்திலேயும் இரண்டு ரூபாய் பிடித்தம் செய்து, சுமார் 9,000 தொழிலாளர்கள் அதிலே பணியாற்றுகிறார்கள். 18,000 ரூபாய் அந்தக் குடும்பத்திற்குப் போய்ச் சேர்கிறது. அதேபோல் ஒவ்வொரு கார்ப்பரேஷனிலும் எந்த அளவு தொழிலாளருடைய எண்ணிக்கை இருக்கிறதோ அதைப்பொறுத்த அளவு தொகை நிர்ணயம் செய்து, பிடித்தம் செய்து, சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடைய குடும்பத்திற்கு நிதியாகப் போய்ச் சேர்கின்றது. அதேபோல், ஓய்வு பெற்ற தொழிலாளியாக இருப்பரேனால் பல்லவன் கார்ப்பரேஷனைப் . பொறுத்த வரையில், ஒரு ரூபாய் பிடித்தம் .செய்து, ஓய்வு பெற்ற தொழிலாளிக்கு வழங்கப்படுகிறது. ஓய்வு பெற்றதற்குப் பிறகு ஒரு கணிசமான தொகை அந்தக் குடும்பத்தாருக்கோ அல்லது ஓய்வு பெற்ற தொழிலாளிக்கோ கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையிலே தான் இந்தத் திட்டம் கடந்த ஆண்டு 29—5—19 9-ஆம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு சமூக நலப் பாதுகாப்பு என்று,

1990 மே, 7]

சொன்னார்கள். அந்தப் பாதுகாப்பின் அடிப்படையில், தொழிலாளர்களுடைய குடும்பத்தாரிலே, இறந்து விட்டால்: அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறதா ? அப்படி அளிப்பது எவ்வளவு நாட்களுக்குள்ளாக அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தொழிலாளி பணியிலே இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு, அவர்களுடைய கல்வித் தகுதி அல்லது தொழில் பழகியிருக்கிற தன்மையினுடைய அடிப்படையில் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களில் வேலைவாய்ப்புகள் உருவாகும்போது முன்னுரிமை கொடுத்து அளிக்கப்படுகின்றன. எவ்வளவு நாள் என்று உறுதியிட்டுச் சொல்லமுடியாது. ஏனென்றால், வேலை வாய்ப்புகள் உருவாகும்போதுதான் அவர்களுக்கு நாம் வேலைவாய்ப்பை அளிக்கமுடியும்.

திரு எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் பணி புரிகின்ற தொழிலாளர்கள் பெரும்பாலும் விபத்தினால் பாதிக்கப்படுகின்றார்கள். அப்படி அவர்கள் இறக்கும்போது, அரசாங்கம் அந்தக் குடும்பத்தாருக்குக் கொடுக்கின்ற நிவாரணம் எவ்வளவு ?அதைக் கொஞ்சம் அதிகரிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பணியிலே இருக்கும்போது, எதிர்பாராமல் விபத்திற்காட்பட்டோ அல்லது இயற்கையாகவோ மரணம் அடைந்து விட்டால், ஏற்கெனவே அவர்களுடைய குடும்பத்தாருக்கு 20,000 ரூபாய் என்று வழங்கப்பட்டுக் கொண்டு வந்தது. கடந்த வாரம்தான் நம்முடைய போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, அந்த 20,000 ரூபாய் 40,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

9-10 மணி.

திரு. உ.ரா. வரதராசன் ன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிக்காலத்திலே இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுகளுக்கு, போக்குவரத்துக் கழகங்களிலே வேலை வாய்ப்பு உருவாகும்போது, வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகங்கள் அத்தனையும், அரசினுடைய நிர்வாகத்திலே இருக்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு வேலைவாய்ப்பு ஒரு கழகத்திலே உருவாகாத நிலைமை இருந்தால், பணிக்காலத்திலே இறந்த

வர்களின் வாரிசுகளுக்கு மற்றக் கழகங்களில் வேலைவாய்ப்பு இருந்து, அவர்களுக்கு அந்தக கழகங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் தனித்தனி நிர்வாக அமைப்புக்களைக் கொண்டது. ஆகவே, ஒரு போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றும்போது இறந்து விட்ட தொழிலாளியின் வாரிசுக்கு, இன்னொரு போக்கு வரத்துக் கழகத்திலே வேலைவாய்ப்பு அளிப்பது என்பது இயலாத காரியம்.

ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியங்களைப் பிரித்தல்.

2181—திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரிய ஒன்றியங்களான ஒட்டன்சத்திரம் மட்டும் தொப்பம்பட்டியை மூன்று ஒன்றியங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இரண்டு ஒன்றியங்களும் 75 ஊராட்சி மன்றங்களைக் கொண்டது. அவற்றை மூன்றாகப் பிரித்துக் கொடுக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தனலவர் : மூலக் கேள்வியே அதுதான். எனவே, துணைக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுபோன்ற பெரிய ஒன்றியங்களையெல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS